Tamil Version

# நீரழிவு ரெடினோபதி பரிசோதனைத் திட்டம்



## நோயாளிகளுக்கான தகவல்

சுகாதாரம், சமூக சேவைகள் மற்றும் பொதுப் பாதுகாப்புத் துறை
ஜனவரி 2007

உங்களுக்கு நீரழிவு நோய் இருப்பதால், உங்களது ஜிபி உங்களுக்காக நீரழிவு ரெடினோபதி பரிசோதனை சேவையில் பங்கேற்க ஏற்பாடு செய்துள்ளார். இது இலவசமானதாகும் மற்றும் உங்களது நீரழிவு நோய் சிகிச்சையின் பகுதியாக வழங்கப்படுகிறது.

**நீரழிவு ரெடினோபதி என்றால் என்ன?**
கண்ணின் ரெடினா என்றழைக்கப்படும் பகுதியில் உள்ள சிறிய இரத்தக் குழாய்களை நீரழிவு நோய் பாதிக்கும் போது இது உண்டாகிறது. இந்த இரத்த குழாய்கள் தடைபட்டோ அல்லது கசியவோ கூடும் மற்றும் சரியாக வேலை செய்யாத இரத்த குழாய்களுக்கு மாற்றாக புதிய குழாய்கள் உருவாகலாம். ஆரம்ப நிலையில், வழக்கமாக இந்த மாற்றங்கள் உங்கள் பார்வையை பாதிக்காது. எனினும், சிகிச்சையளிக்கப்படவில்லை எனில் ரெடினோ மோசமடைந்து உங்கள் கண்பார்வையும் பாதிக்கக் கூடும்.

**நீரழிவு ரெடினோபதிக்காக பரிசோதனை செய்வது ஏன் முக்கியமானது?**
நீங்கள் மாற்றங்களை உணரும் முன்பே, நீரழிவு ரெடினோபதி பரிசோதனை செய்வதன் மூலம் ரெடினோவில் உள்ள மாற்றங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய இயலும். சரியான சமயத்தில் கண்டறியப்பட்டால் பெரும்பாலான நபர்களிடம் கண்பார்வை இழப்பைத் தடுக்கும் விதத்தில் சிகிச்சையானது மிகவும் திறனுள்ளதாக இருக்கும். எனவே, உங்கள் கண்களை பரிசோதனை செய்து கொள்வதும் அனைத்து பரிசோதனை சந்திப்புகளுக்கு வருகை புரிவதும் முக்கியமானதாகும்.

**நீரழிவு உள்ள அனைவரும் பரிசோதனை செய்ய வேண்டுமா?**
ஆம்! 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய நீரழிவு உள்ள அனைவரும் அவர்களது கண்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உங்களது நீரழிவு எப்படிக் கட்டுப்படுத்தப்படுகிறது என்றாலும், நீங்கள் உங்களது ஜிபி அல்லது ஒரு மருத்துவமனை ஆலோசகரிடம் சென்றாலும் கட்டாயம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**நான் ஏற்கனவே ஒரு கண் மருத்துவமனைக்கு சென்று கொண்டிருக்கிறேன். நானும் பரிசோதனை செய்யப்பட வேண்டுமா?**
நீரழிவு ரெடினோபதி சிகிச்சைக்காக ஏற்கனவே கண் மருத்துவமனைக்கு செல்லும் நபர்கள் மட்டுமே பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் வேறு ஏதாவது கண் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்பவராக இருந்தால், நீங்கள் பரிசோதனையில் பங்கேற்கத் தேவைப்படும். சந்தேகம் ஏதாவது இருப்பின், தயவு செய்து உங்கள் ஜிபி அல்லது பயிற்சி செவிலியரிடம் ஆலோசிக்கவும்.

**எனது கண் சிகிச்சை நிபுணரிடம் ஏற்கனவே நான் செல்கிறேன். எனது பரிசோதனை அப்பாயிண்ட்மென்டில் நான் மேலும் பங்கேற்க வேண்டுமா?**
ஆம். பரிசோதனையானது உயர்ந்த தரத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்த ஒரு முறையமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் பரிசோதனை செய்வது முக்கியமானதாகும்.

**எனது கண் சிகிச்சை நிபுணரிடம் (ஆப்டிஷியன்) மேற்கொண்டும் நான் செல்லத் தேவைப்படுமா?**

ஆம். கண்ணாடிக்கான பார்வை பரிசோதனையை செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் உங்கள் கண் சிகிச்சை நிபுணரை நீங்கள் சந்திக்க வேண்டும். நீரழிவு உள்ள நபர்களுக்கு இந்த பரிசோதனை இலவசமானது.

**ரெடினோபதி பரிசோதனையின் போது உண்மையில் என்ன நடக்கிறது?**
பரிசோதனையானது, ஒரு சிறப்பு கேமராவைப் பயன்படுத்தி ஒவ்வொரு கண்ணின் பின்பக்கத்தை இரண்டு புகைப்படங்கள் எடுப்பதை உள்ளடக்கியிருக்கிறது. இந்த சோதனை வலி இல்லாதது மற்றும் 15 நிமிடங்கள் எடுக்கும். நீங்கள் 50 வயதுக்கும் மேற்பட்டவர் எனில் உங்களது கண்மணி விரிவடையச் செய்ய சோதனைக்கு 15 நிமிடங்களுக்கு முன் உங்கள் கண்களில் சொட்டு மருந்துகள் விட்டுக் கொள்ளத் தேவைப்படும். இது தரமான புகைப்படங்களை எடுக்க உதவுகிறது. இளம் நபர்கள் சிலரிடத்திலும் கண் சொட்டு மருந்துகள் பயன்படுத்தப்படக் கூடும். இது தேவைப்படுமெனில், நீங்கள் பங்கேற்கும் போது புகைப்படநிபுணர் உங்களிடம் கலந்தாலோசிப்பார்.

**இந்த கண் சொட்டு மருந்துகள் ஏதாவது விளைவுகளை ஏற்படுத்துமா?**
இந்தச் சொட்டு மருந்து சில விநாடிகளுக்கு மட்டுமே வலி உணர்வை ஏற்படுத்தக் கூடும். 15 நிமிடங்களுக்குப் பிறகு உங்கள் பார்வை சற்று மங்கலாகத் தெரியும் மற்றும் உங்கள் அருகில் உள்ள பொருட்களைப் பார்ப்பது சற்று கடினமாக இருக்கக் கூடும். இந்த தெளிவற்ற பார்வை சில மணி நேரங்களுக்கு நீடிக்கக் கூடும். எனவே நீங்கள் வாகனம் ஓட்டுவது பாதுகாப்பானதாக இல்லாமல் அமையும்.

**கண் சொட்டு மருந்துகள் விட்டுக் கொண்ட பின் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரங்களுக்கும் மற்றும் வாகனம் ஓட்டலாம் என்று நீங்கள் முழுமனதாக உணரும் வரையும், மோட்டார் வாகனம் எதையும் நீங்கள் இயக்க வேண்டாம் என பலமாக அறிவுறுத்தப்படுகிறது.**

வெகு அரிதாக, கண்ணினுள் அழுத்தம் திடீரென உயர சொட்டு மருந்து காரணமாக கூடும். இது கீழ்க்கண்ட அறிகுறிகளின் மூலம் உணரப்படுகிறது.

- கண் அல்லது கண்ணைச் சுற்றியுள்ள பகுதியில் வலி அல்லது தீவிர அசௌகரியம்
- கண்ணின் வெள்ளைப் பகுதி சிவத்தல்
- பரிசோதனை செய்த சில மணி நேரங்கள் கழிந்த பின்னும் மங்கலான பார்வை நீடித்தல் அல்லது மோசமடைதல்

உங்களுக்கு இந்த அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் உங்களது ஜிபி-யிடம் நீங்கள் திரும்ப வரவேண்டும் அல்லது விபத்து மற்றும் அவசரசிகிச்சை துறையை நீங்கள் நாட வேண்டும். சிகிச்சை வெற்றிகரமாகவும் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களைத் தடுக்கும் விதமாகவும் இருக்கும்.

**எனது பரிசோதனை முடிவை நான் எவ்வாறு பெறுவேன்?**
சிறப்பாகப் பயிற்சியளிக்கப்பட்ட நபரால் புகைப்படங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதால், பரிசோதனையின் முடிவில் உங்களது பரிசோதனை முடிவை நீங்கள் பெற

மாட்டீர்கள் நான்கு வாரங்களுக்குள் உங்களது பரிசோதனை முடிவு உங்கள் ஜிபி-யிடம் அனுப்பி வைக்கப்படும். உங்கள் ஜிபி-யை நீங்கள் தொடர்பு கொண்டு பரிசோதனை முடிவை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**வேறு எவரெல்லாம் எனது பரிசோதனை முடிவைப் பெறுவர்?**
நீரழிவு சிகிச்சை மருத்துவமனைக்கு நீங்கள் சென்றால், உங்களுக்கு சிகிச்சையளிக்கும் நிபுணருக்கும் பரிசோதனை முடிவு அனுப்பப்படும். நீங்கள் அனுமதியளிக்காத வரை உங்களது பரிசோதனை முடிவை வேறு எவரும் பெறமாட்டார்கள்.

**அடுத்து என்ன நடக்கும்?**
பெரும்பாலான நபர்கள் மீண்டும் பரிசோதனைக்காக ஒரு வருடத்திற்குள் வரும்படி அழைக்கப்படுவார்கள். இருந்த போதிலும்,

- துல்லியமான முடிவை அளிக்கும் அளவிற்கு புகைப்படங்கள் தெளிவானதாக இல்லையெனில்
- கண் மருத்துவ மனையில் சிகிச்சையளிக்க அல்லது கவனிக்க தேவைப்படும் அளவிற்கு உங்களுக்கு நீரழிவினால் கண் பாதிப்புகள் இருந்தால்
- சந்தர்ப்பவசமாக, மேலதிக ஆய்வுகள் செய்யத் தேவைப்படும் வேறேதும் கண் கோளாறுகள் கண்டறியப்பட்டால்.

மேலதிக மதிப்பீடுகளுக்காக நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள்.

**பரிசோதனை சந்திப்புகளுக்கிடையில் எனது கண்கள் குறித்து ஏதேனும் விஷயங்கள் இருப்பின் நான் என்ன செய்ய வேண்டும்?**
உங்களது அடுத்த பரிசோதனை சந்திப்பிற்காக காத்திருக்க வேண்டாம். உங்களது ஜிபி அல்லது கண் சிகிச்சை நிபுணரிடம் (ஆப்டிசியன்) இருந்து ஆலோசனைகளைப் பெறவும்.

**பரிசோதனைக்குப் பின் எனது புகைப்படங்கள் மற்றும் விவரங்கள் என்ன செய்யப்படும்?**
பரிசோதனைக் சேவையானது, உங்களது புகைப்படங்கள் மற்றும் விவரங்களைக் குறைந்தபட்சம் எட்டு வருடங்களுக்கு வைத்திருக்கும். உங்களது மிகச் சமீபத்திய புகைப்படங்களை முந்தைய படங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பரிசோதனைத் திட்டத்தின் தரத்தைக் கண்காணிக்கவும் அவை பயன்படுத்தப்படும்.

**எனது கண்களில் நீரழிவு ரெடினோபதி உள்ளதாக கண்டறியப்பட்டால் என்ன நடக்கும்?**
நீரழிவு ரெடினோபதி மாற்றங்களின் அளவுகளைப் பொறுத்து மேலதிக பரிசோதனை மதிப்பீடுகளுக்காக ஒரு கண் மருத்துவமனைக்கு நீங்கள் பரிந்துரைக்கப்படுவீர்கள். இல்லையெனில் ஒரு வருட காலத்தில் மீண்டும் பரிசோதனைக்கு வரும்படி நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

**நீரழிவு ரெடினோபதிக்கு சிகிச்சை உண்டா?**

ஆம். சரியான சமயத்தில் செய்யப்பட்டால், லேசர் சிகிச்சையானது பெரும்பாலான நபர்களிடத்தில் பார்வை இழப்பை தடுப்பதில் மிகச் திறனானதாகும். கண் மருத்துவமனையில் உள்ள நிபுணர் இதை உங்களிடம் விளக்குவார்.

**உங்களுக்கு நீரழிவு ரெடினோபதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், உங்களது இரத்த குளுக்கோஸ் அளவுகள் மற்றும் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எப்போதும் முக்கியமானதாகும்.**

**நீரழிவு ரெடினோபதி குறித்த நல்ல செய்திகள்**

- இது சிகிச்சையளிக்கப்படக் கூடிய நிலையேயாகும்.
- பரிசோதனை முக்கியமானதாகும். ஏனெனில் ரெடினோபதியின் ஆரம்ப சமிக்கைகள் வழக்கமாக எவ்வித அறிகுறிகளையும் தோற்றுவிக்காது
- நீரழிவு உள்ள அனைவரும், இந்த சூழ்நிலை உள்ளதா என்பதை அறிய தங்களது இரு கண்களையும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.
- கண் பாதிப்பைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் சோதனை இலவசமாகும்.
- வலியற்ற சோதனை
- சோதனை 15 நிமிடங்களை மட்டுமே எடுத்துக் கொள்ளும்.
- ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால், பார்வை இழப்பைத் தடுக்க இயலும்.

*நீரழிவு ரெடினோபதி குறித்த மேலதிக தகவல்களுக்கு உங்கள் ஜிபி அல்லது கண் சிகிச்சை நிபுணரிடம் கலந்தாலோசிக்கவும் அல்லது தொடர்பு கொள்ளவும்.*

Diabetes UK
Telephone: 028 9066 6646
Website: www.diabetes.org.uk